# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 469/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W.4 |
| Name | :Samuvel |
| Fathers Name | :Packiyanathan |
| Village | :Manali., Thuckalay |
| Taluk | :Kalkulam |
| Calling | :S.I |
| Religion | :Hindu |
| Caste | :-- |
| Age | :58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2024.

**( 1,3,5 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. 2 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை-**

நான் கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கொற்றிகோடு காவல் நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் மோகன்தாஸ் மற்றும் உதவி ஆய்வாளர் ரசல்ராஜ் என்பவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நிகழ்நிலை புகரர்தாரரான அ சா 1 பிரியா எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டதாலும் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ சா 2 அல்போன்சா,. அ சா 3 அனிஷ் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதால் தற்போது நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 04.08.2020 ம் தேதி மாலை 14.00 மணிக்கு தலைமை காவலர் மோகன்தாஸ் நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி பிரியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவை பரிசீலனை செய்து கொற்றிகோடு காவல் நிலைய குற்ற எண்188/2020 இதச பிரிவுகள் 147,294(பி), 323, 324, 427, 506(2) மற்றும் பிரிவு 4 பெண்களுக்கு

தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆகும்.

2. பின்னர் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் ரசல்ராஜ் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார், மேற்படி உதவி ஆய்வாளர் ரசல்ராஜ் அவர்கள் வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 4.8.2020 ம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெர்லின் மற்றும் ஜான்றோஸ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.3** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்னர் சாட்சிகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரியா, அல்போன்சா, ஷெர்லிமோன். அனிஷ் , குளோரி, விஜயகுமார்., பெர்லின்., ஜான்றோஸ் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மோகன்தாஸ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிட்சை அளித்த மருத்துவர் பழனி கிருத்திகா என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரிடம் காயச்சான்றும் பெற்றுள்ளார். அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும் .** சம்பவத்தின் போது சாட்சி ஷெர்லிமோன் என்பவர் **போனின் மூலம் எடுத்த புகைப்படம் (7 எண்ணம்) அ சா ஆ 6 ஆகும்**.

4 மற்றும் 5 எதிரிகளை நிலையத்தில வைத்து கைது செய்து நிலைய பிணையில் சென்றுள்ளார்கள். மற்ற எதிரிகள் முன்பிணையில் சென்றுவிட்டதல் எதிரிகளை கைது செய்யவில்லை. பின்னர் விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் சம்பந்தப்பட்ட எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147,294(பி), 323, 324, 427, 506(2) மற்றும் பிரிவு 4 பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை முறையாக புலன் விசாரணை செய்யாமலும் ஏற்கனவே காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பொய்யாக இறுதி அறிக்கை தயார்

செய்யப்பட்டு அதனடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்